# பூரண விசாரணைக்கு உடனே கமிஷன் வேண்டும்

.. istered as a Newspaper in Ceylon ✶ ✶ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற்பெட்டி எண : 49

மலர் 9
போன் 339

National Tamil Daily

இதழ் 62
தேசிய தினசரி

பராபவ பங்குனி 30 முஹறம் 2 வியாழக்கிழமை [13-4-67]

## பிரதமருக்கு ஜி. ஜி. தந்தி

யாழ்ப்பாணம், வியா.

வல்வெட்டித்துறையில் பொலிஸும் ராணுவமும் மிருகத்தனமாக நடந்துகொண்டார்கள் என்பதில் தமக்கு எதுவித சந்தேகமுமில்லையென்றும். தாம் அப்பகுதி எம். பி. பிக்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை இதை திட்டவட்டமாக நிரூபித்துள்ளதெனவும். இவர்களின் இச்செய்கை அநியாயமானமரணத்துக்குக்காலாகிவிட்டதால் இது சம்பந்தமாக பூரண விசாரணை நடத்த உடனடியாக ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவேண்டுமெனவும்யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலம் பிரதமருக்கு அனுப்பியுள்ள அவசரத்தந்தியில் கோரியுள்ளார்.

அரசாங்கத்தில் மக்கள் மீண்டும் நம்பிக்கை கொள்வதற்கு இவ்வித விசாரணைக் கமிஷன் நியமிப்பது அவசியமெனவும் திரு. ஜி ஜி. அத்தந்தியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

வல்வெட்டித்துறையில்

(6-ம் பக்கம் பார்க்க]

# "நேரு கனவை நனவாக்க யுதாண்ட் உழைக்கிருர்"

## சமாதான விருதுவழங்கி இந்தியா பாராட்டு

புதுடில்லி, ஏப். 12

சர்வதேச பரிவுணர்வுக்கான முதலாவது ஜவஹர்லால் நேரு விருது இன்று காலை ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டுக்கு வழங்கப்பட்டது.

இங்கு நடைபெற்ற வைபவத்தில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியானஇந்த விருதை ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வழங்கினர்.

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியும் கலந்து கொண்ட இந்த விருதுஅளிக்கும் வைபவத்தில், ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டுக்கு விருதுடன் சான்றுப்பத்திரமும் வழங்கப்பட்டது.

'யுதாண்ட் மனச்சாட்சியுள்ள மனிதராக விளங்குகிருர். உலகப்பிரச்னையை நன்குணர்ந்த மனிதர். உலகத்தில்சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்றுசஉறுதி கொண்டிருந்த நேருவின் கனவை நனவாக்குவதில் முன்னிற்பவர்' என்று யுதாண்டுக்கு வழங்கப்பட்ட பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி யுதாண்டைப்பாராட்டிப் பேசுகையில், 'ஐக்கியத்துக்கும் சமாதானத்துக்குமாக தன்னையே அர்ப்பணித்து உழைக்கும் யுதாண்டுக்கு இந்த விருது மிகவும் பொருத்தமானது' என்ருர்.

'யுதாண்ட் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்; அத்துடன் சமாதானத்தை விரும்பும் மனிதர். அதேபோல் நேருவும் விளங்கினர். நேருவின் போக்கு யுதாண்டுடன் இணைந்து போகிறது' என்றும் ஸ்ரீமதி இந்திரா சொன்னர்

ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசுகையில், பலவிதமான தடைகள் ஏற்பட்ட போதிலும் சலிப்பின்றி, தமது சமாதான யாத்திரையைத்தொடர்ந்து நடாத்தும் யுதாண்ட் அதில் வெற்றிபெறுவதற்கு பாரதம் தனது ஒத்துழைப்பை என்றும்அளிக்கும்என்ருர்.

வெளியுறவு மந்திரி திரு. சக்ளா வரவேற்புரைநிகழ்த்திஞர்.

யுதாண்ட் நன்றிதெரிவித்துப் பேசினர்.

விருதுவழங்கும் வைபவத்தின்போது மேடையில் நேருவின் சிந்தனைசெய்துகொண்டிருப்பதுபோன்ற போட்டோவைக்கப்பட்டிருந்தது அதற்குமுன்னுல் அழகிய சிவப்பு றோஜா வைக்கப்பட்டிருந்தது.

## அநிகவேலைகள் கிடைத்தன

கொழும்பு, செவ்.

இலங்கைப் பொருளாதாரத்தின் கைத்தொழில்பிரிவு 1666-ம்வருடத்தில் 1665 ம் வருடத்திலும் பார்க்க 4,853 பேரை அதிகமாக வேலைக்கு எடுத்துள்ளது. மொத்தம் 64,418பேருக்கு கைத்தொழிற் பிரிவு வேலை வழங்கியுள்வது.

## கிராமங்கள் தோறும் மக்கள் வங்கிக் கிளைகள்

### விவசாயிகள் கடன் உதவி பெற வசதி

கொழும்பு, புதன்

வங்கி வசதிகளில்லாத பகுதிகளில் மக்கள் வங்கி கிளைகள் நிறுவுவதற்கு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வங்கிக்கிளைகள்நிறுவுவதற்கேற்ற தகுந்த கிராமங்களை கூட்டுறவுப் பகுதியின் உதவியுடன் மதிப்பீடுகள் இப்போது எடுக்கப்படுகிறது.

விவசாயிகள் கடன்பெறுவதற்கும், கிராம அபிவிருத்திக்கு கடன் பெறுவதற்கும் உதவி அளிக்குமுகமாக இந்த வங்கிக் கிளைகள் நிறுவப்படுவதாகத் தெரிகிறது.

மக்கள் வங்கியின் 58-வது கிளை மஹிந்தாஞவில் திறக்கப்பட்டிருக்கிறது. அடுத்த சில வாரங்களில் மேலும் பல கிளைகள் திறக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## 'மோட்டார்கார் லைசென்ஸ்' தமிழிலும் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று யாழ்ப்பாணக் கச்சேரியில் முதல் தடவையாக கார் லைசென்ஸ் தமிழில் வழங்கப்பட்டது.

கார் லைசென்ஸ் தமிழில் வழங்கப்பட வேண்டுமென அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் காரியதரிசி திரு. மு. மருதபிரானும் மற்றும் பலரும் எடுத்து வந்த முயற்சி காரணமாகவே கார் லைசென்ஸ் தமிழில் வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது.

நேற்று 1967-ம் வருடத்துக்கான கார் லைசென்ஸை திரு ஆலாலசுந்தரம், திரு. அப்புத்துரை ஆகியோர் தமிழில் முதன்முறையாகப் பெற்ருர்கள். கார்லைசென்ஸ்தமிழில் சுமக்குத்தரவேண்டுமென இவர்கள் வற்புறுத்தி வந்தார்களாம்.

## 1,500 ஏக்கர் நெற்பயிர் தப்பியது

### வவனியா அரசாங்க அதிபரின நடவடிக்கை

வவனியா, புதன்

வவனியா மாவட்டத்திலுள்ள பாவல்குளத்தில் 1500 ஏக்கர் நெற்பயிர்கள் வாடிவதங்கியிருப்பதை அறிந்த வவனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வி. சி. பெரேரா, உடனடியாக அதற்கு நிவாரணமளித்து பயிர்களுக்கு தண்ணீர் பாய்ய்ச்சும் வேலையைமேற்கொண்டுள்ளார்.

பாவல்குளம் நீர்மட்டம் வாட்சி காரணமாக கீழ் நிலைக்கு 'பேனமையால குளத்தில் இருந்து நீர்ப்பாய்ச்ச முடியாமலிருந்தது. அரசாங்க அதிபர் உடனடியாக வவனியா விவசாயப்பகுதியினருக்கு சொந்தமான நீர்ப்பாச்சும் இயந்திரங்களை குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்பி தண்ணீர் இறைக்க ஏற்பாடு செய்துள்ளார். இதனுல் 1500 ஏக்கர் பயிர்கள் காப்பாற்றப்பட்டன.

இப்படியான அவசர வேலையில் உழவுயந்திரம் வேலைசெய்து கொண்டிருக்கும் பொழுது, உழவுயந்திரங்களை உடனடியாக வேறு மாவட்டத்திற்கு அனுப்பும்படி, உத்தரவு கிடைத்ததாகவும், ஆனுலும் தொடர்ந்து யந்திரங்கள் நீர்ப்பாய்ச்சும் வேலையில்

[6-ம் பக்கம்பார்க்க]

# பொலிஸ் அதிகாரியை அடையாளங்காட்டினர்

வவனியா, புதன்

பொலிஸ் நிலையத்திற்குப் புகார் செய்யச்சென்ற தம்மை பொலிஸ் அதிகாரியொருவர் கெடுத்ததாகப் புகார் செய்த பார்வதி என்ற இளம்பெண், அந்தப் பொலிஸ் அதிகாரியை இன்று நண்பகல் நடைபெற்ற ஆள் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினர்.

வவனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற பார்வதி என்ற இளம் பெண்ணைக் கெடுத்ததாக வவனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர்ந்து இன்று நண்பகல் ஆள் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

இருபதுபேர் கலந்து கொண்ட இந்த அணிவகுப்பில் அந்தப் பொலிஸ் அதிகாரி வெள்ளைச் சாரமும் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார். தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கும் இந்த அதிகாரி றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிருர்.

ஜனதிபதி தேர்தல்

## ஸாகிர்ஹுசேன மனுதாக்கல்

புதுடில்லி, ஏப்ரல் 12

இந்திய ஜனதிபதி தேர்தலுக்கான தனது நியமனப் பத்திரத்தை உப ஜனதிபதி ஸாகிர் ஹுசேன் இன்று தாக்கல் செய்தார். பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி பிரேரித்தார். ஜனதிபதி தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட 12-வது வேட்புமனு இது.

## நன்றி நவிலல்

அகால மரணமடைந்த திரு. வி. ஆர். சிவஞானசுந்தரம் அவர்களின் இறுதிச்சடங்கில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் அன்னரது குடும்பத்தினர் தமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருர்கள். தனித்தனியே நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருத்தம் தெரிவிக்கிருர்கள்.

வி. வி. ராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்,
325, கே. கே. எஸ் வீதி
வல்வெட்டித்துறை

2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தமிழ், சிங்கள புது வருடப் பிறப்பையொட்டி 14-4-67 வெள்ளிக்கிழமை ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் 15-4-67 சனிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணிவாக்கு

'சத்தியம் என்னும் திருக்கோயிலை அடைய விரும்புவோன் அஹிம்சை என்னும் நெறியில் தான் இயங்கவேண்டும்.

அஹிம்சைக்கு ஆண்மை தேவை. அதுவே வீரத்தில்சிறந்த வீரனின் வீரம்.

அஹிம்சையிலும் சத்தியத்திலும் தோல்வி என்பதே கிடையாது

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ வருஷம் பங்குனி மீ 30உ (13-4-67)

# நகரமண்டபத் திருத்தம் வீண் செலவல்ல

# விசேஷ ஆணையாளர்கள் விளக்கம்

4-4-67 'ஈழநாடு' பத்திரிகையில் திரு. பி. சுந்தரம் பிள்ளையுடன் மற்றும் நால்வர் கையெழுத்திட்டு வெளியிட்ட கடிதம் சார்பாக, வரியிறுப்பாளர்களுக்கு உண்மைநிலையை அறிவுறுத்துவதற்குக் கீழ்க்காணும் உண்மைகளைத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### யாழ்ப்பாண நகர மண்டபம்

கடந்த 30 வருடங்களுக்கும் அதிகமாக யாழ்ப்பாண நகர மண்டத்துக்கு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லையென்பதால், 30 வருடகாலப் பாவனையால் மண்டபம் நவீன சிறப்பை எய்திவிட்டதென்று அர்த்தமல்ல. நாடகங்கள், இசை நிகழ்ச்சிகளுக்கு அரங்கமாகவும், திருமணச் சடங்குகளுக்கும், உயர் நீதிமன்றமாகவும் பாவிக்கப்பட்டு வரும் மண்டபத்திற்கு— தற்காலத்திற்குரிய சிறப்பு நியமத்தை அளிப்பதற்காக திருத்தங்கள் செய்யவேண்டியிருந்தது. கௌரவ உள்ளூராட்சி அமைச்சர், யாழ்ப்பாணம்-நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரித்தானியச் சங்கத்தின் [பிரிட்டிஷ் கவுன்சில்] பிரதிநிதிகள் உட்பட, திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்பு நிகழ்ச்சிகளைப் பார்வையிடும் வாய்ப்புப் பெற்ற வரியிறுப்பாளர் யாவரும் நகரமண்டபத்திற்குச் செய்யப்பட்டிருக்கும் திருத்தங்களைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்திருக்கிறார்கள். ஏப்ரல் 18ல் இருந்து ஆரம்பமாகவிருக்கும் உயர் நீதிமன்ற அடுத்த பருவத்திற்கான விசாரணைகளை நடத்துவதற்கு நகரமண்டபம் தெரிவுசெய்யப்பட்டிருப்பது, உயர் நீதிமன்ற விசாரணைகள் நடைபெற நகர மண்டபம் தகுதியற்றதாகிவிட்டதென்று கட்டப்பட்டிருக்கும் கதையைப் பொய்ப்பித்துவிட்டது. மேற்படி கடிதத்தை வரைந்தவர்கள் அறியாப்பிரகாரம் சுட்டிய மாநகரமண்டபத்தின் தரம் உயர்த்தப்பட்டது காரணமாக இலங்கைத் தீவிலேயே சிறந்து விளங்கக்கூடிய தனியொரு மண்டபமாக இம்மண்டபம் திகழ்கின்றது என்பதை அறியத்தருவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். வருவாய் குறைந்துவிட்டதென்ற குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில் கீழ்க்காணும் தொகைகளே குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கப் போதுமானதாகும்.

| | |
|---|---|
| 1-6-61—31-5-62 | ரூ. 7,800-20 |
| 1-6-62—31-5-63 | 7,030-92 |
| 1-6-63—31-5-64 | 6,906-44 |
| 1-6-64—31-5-65 | 10,385-49 |
| 1-6-65—31-5-66 | 7,650-17 |
| 1-6-66—31-3-67 [சிறப்பு ஆணையாளர்களின் 10 மாதகால ஆட்சியில்] | 10,075-20 |

நகர மண்டபத்திற்குத் திருத்தங்கள் செய்யப்பட்ட பின் 14-2-67இல் இருந்து 31-3-67 வரையுள்ள [அதாவது 1 1/2 மாத] காலத்திற்குக் கிடைத்த வருவாய்த் தொகை ரூ. 1.991-36 ஆகும். முழுதும் ஒத்த மட்டமுள்ளதாகத் தரையிருந்தபோது உப்பரிகையின் கீழே [அதாவது பல்கனியின் கீழே] இருக்கும் இடத்தை யாரும் பாவிப்பது கிடையாது. தற்பொழுதோ மேடையைத் தெளிவாகப் பார்க்கக்கூடிய நிலையில் மேலதிகமாக நூறு இருக்கைகளைக் கூடுதலாகப் பாவிக்கக்கூடியதாக உள்ளது.

### கோவில் உற்சவகால இலவச சேவை

[illegible] இயங்கி வந்த காலத்தில் உற்சவங்களுக்கு இலவசமாக மின்சாரம், நீர் வழங்கப்பட்டு வந்திருப்பது உண்மையே. அப்படி நடைபெற்றுவந்திருப்தால் ஏனைய சபைகளுக்கு இதுபோன்ற இலவசவிநியோகங்களின் பேரில் கணக்குப் பரிசோதனைப் பகுதியாரால் எழுப்பப்பட்டிருக்கும் 'கேள்விகள்' இங்கு தலைகாட்டமாட்டாவென்று அர்த்தமல்ல. அவ்விதம் கணக்குப் பரிசோதனைப் பகுதியாரிடமிருந்து கேள்வி பிறக்குமாகில் சபை தான் மேலதிக கட்டணம் செலுத்தவேண்டி நேரிடும். எதிர்காலத்தில் மேலதிகக் கட்டண அறவீடுகளைச் சபை எதிர்நோக்காதிருக்கும்பொருட்டுக் கட்டணம் செலுத்துவதன்பேரில் மேற்படி சேவையைத் தொடருவதே புத்தியானதென்று கருதப்பட்டது.

### 3. கொழும்புத்துறை நீர் விநியோகம்:

கழிவுநீரை மட்டிலுமே ஓடவிடுவதற்கு உபயோகிக்கப்படக்கூடியதும், நீர் விநியோக சேவைக்கு உபயோகிக்க உதவாததுமான வடிகால் குழாய்களைக் கொள்வனவு செய்து அவற்றைப் பொருத்துவதற்கு சபைப்பணம் ரூ. 10,000/-ம் எந்த நோக்கத்தின் பொருட்டு விரயம் செய்யப்பட்டதென்பது சபை ஒன்றுக்கே வெளிச்சம். இதன் காரணமாக கொழும்புத்துறைக்கான நீர்விநியோகம் சிறப்பு ஆணையாளரால் நிறுத்தப்பட்டதுதான் உண்மை. அச்சேவை அனுமதிக்கப்பட்டிருக்குமாகில் கொழும்புத்துறை மக்களுக்கு குழாய் நீர் கிடைத்திராது. வெறும் குழாய்கள் மட்டும்தான் கிடைத்திருக்கும் குழாய்கள்தான் ஏற்கனவே உடைந்துபோய் விட்டனவே. பெரும் சிரமமெடுத்து உபயோகிக்கப்படாத குழாய்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தாருக்கு திரும்ப தரப்பட்டது. இதன் மூலம் சபைக்கு பெரும் தொகைப்பணம் மிச்சப்படுத்தப்பட்டது. மேற்படி விஸ்தரிப்பைச் செய்வதற்கு நீர்விநியோக வடிகாலமைப்பு அதிபரின் அங்கீகாரத்தைக்கேட்டு சிறப்பு ஆணையாளர் கடிதம் எழுதியுள்ளனர். இவ்வங்கீகாரம் கிடைத்ததும் கொழும்புத்துறையில் குடியிருக்கும் மக்களுக்கு வடிகால் குழாய் மூலமாக அல்லாது நீர் வழங்கல் சேவைக்கு உபயோகிக்க இலாயக்கான நல்ல குழாய்களின் மூலம் குழாய் நீர் விநியோகிக்கப்படும்.

### 4. ஆரியர் குளத்தில் பொதுசன மலகூடம்:

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு நெசவு நிலையம் ஒன்று நிறுவும் படியாக பொதுசன மலகூடம் இடிக்கப்பட்டு அந்நிலையம் குத்தகைக்கு அவர்களுக்கு வழங்கப்பட்டது. தமக்கென ஓர் நெசவு நிலையத்தைத்தானும் அமைப்பதற்குச் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு ஒரு துண்டுக் காணிதானும் பெறக்கூடாமல் இருந்தபடியால் தான் அவ்விதம் செய்யப்பட்டது.

நாகவிகாரைக்குவரும் யாத்திரிகர்களுக்கு அவர்களது வசதிக்காக குறிப்பிட்டசிற

[5-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அதிபரின் செய்தி

பொலிஸ் அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் திரு. ஜோன் அட்டிகலை பொலிஸ் சேவையிலுள்ளோருக்கு விடுத்திருக்கும் பிரியாவிடைச் செய்தியில், பொதுமக்களுக்கு உதவியும் சேவையும் செய்வதுதான் பொலிஸ் சேவையின் முதல் முக்கிய கடமை என்று குறிப்பிட்டிருக்கிறார். பொலிஸ் படையில் முப்பத்தொன்பது ஆண்டுகள் பணியாற்றி மிக உயர்ந்த பதவி வகித்து ஓய்வு பெறும் திரு. அட்டிகலை, அனுபவ முதிர்ச்சி பெற்றுத் தெரிவித்துள்ள இக்கருத்து, பொலிஸ் உடையிலிருந்து ''எதுவும் செய்யலாம், எப்படியும் நடக்கலாம்'' என்ற தவறான மனப்பான்மையுடைய சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குப் பயன்படவேண்டும்.

நாட்டில் சட்டத்தையும்ஒழுங்கையும்நிலைநாட்டுவதும் குற்றச்செயல்களைத் தடுத்து அமைதியைப்பாதுகாப்பதும், குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைப் பிடித்து தண்டனை பெற்றுக் கொடுப்பதன்மூலம் குற்றச் செயல்கள்பரவாமல் தடுப்பதும், பொதுமக்களுக்கு கொள்ளைக்காரர், கொலைகாரர் போன்ற தீயவர்களிடமிருந்து பாதுகாப்பு அளிப்பதும் பொலிசாரின் கடமைகள். கள்ளக் கடத்தலையும், சட்ட விரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதும் அவர்களுக்கு இங்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் மேலதிக பொறுப்புக்கள். பொலிசார் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவர நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம். ஆனால் சென்ற சில வருடங்களாக இங்குள்ள பொலிசார் சிலர், மக்களை அடிமைகளாகவும் தங்களை எஜமானர்களாகவும் நினைத்துக்கொண்டு, தான்தோன்றித் தனமாக மட்டும் அல்லாது சிலசமயங்களில் காடைத்தனமாகவும் நடந்துகொண்டுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிசார் 'கெடுபிடி'த்தனமாக நடந்துகொள்வதற்கு அதிகார வர்க்கத்திலிருந்த சிலர் ஆதரவளித்தனர். அதன் விளைவு நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவர் மீது 'அதிகாரம்' செய்து அடக்குமுறைகளைப் பிரயோகித்து அதன்பின்னர் எல்லோர்மீதும் கைவைக்கத் தொடங்கினர். பொலிஸ் சேவையில் பொதுமக்களுக்குச் சேவை செய்யும் நோக்கமுடையவர்களும் தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றுபவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் தவறாக நடந்து கொள்பவர்களினால் இந்த நல்லவர்களுக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது; நல்லவர்கள் தமது கடமையை நல்ல முறையில் செய்யவும் முடியாதிருக்கிறது.

இங்கு எல்லாத் துறைகளிலும் அரசியல் தலையீடு இருக்கிறது. பொலிஸ், ராணுவத்திலும் அது இடம்பெற்றுவிடுகிறது. சில பொலிசாரின் கெடுபிடிகளுக்கு அரசியல் நோக்கமும் ஒரு காரணம் என்று கூறலாம். தவறான முறையில் நடந்துகொள்ளும் பொலிசாருக்கு தண்டனையாக அவர்கள் வடக்கே அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் இங்குவந்ததும் தன்னிச்சையாக நடந்துகொள்கிறார்கள். வல்வெட்டித்துறைச் சம்பவங்களுக்கும் இதை ஒரு காரணமாகக் கொள்ளலாம்.

வல்வெட்டித்துறையிலிருந்து இராணுவத்தையோ பொலிசையோ அகற்றிவிடக்கூடாது என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில மாலைத்தினசரியான நமது சகபத்திரிகையொன்று எழுதுகிறது. சட்ட விரோதக் குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தடுக்க அவர்கள் இங்கு அவசியமென்றும் அது கூறுகிறது. கள்ளக் கடத்தலையும் கள்ளக்குடியேற்றத்தையும் தடுக்க வேண்டியவர்கள் அமைதியாக வாழும் மக்கள்மீது அநியாயமாகத் தாக்குதல் நடத்தி கொலைகாரர்களாக மாறிவிடுவதை அந்தப்பத்திரிகை மறைத்துவிடுவதுவே தனையளிப்பதாகும். கள்ளக் கடத்தலும் கள்ளக் குடியேற்றமும் வடபகுதியில் மட்டும் நடைபெறவில்லை. இலங்கையின் கரையோரப்பகுதி முழுவதிலும் இராணுவத்தையும் பொலிசையும் நிறுத்தி வைத்தால் இன்னும் பயன் கிடைக்கலாம். சில பத்திரிகைகளும் அரசியல் வாதிகள் சிலரும் தவறான அறிவுரை கூறும் சமயத்தில், ஓய்வு பெறும் பொலிஸ் அதிபர் கூறியுள்ள யோசனை உபயோகமானது; நன்மை பயக்கக்கூடியது.

## நாட்டிலும் நகரிலும்

நாளைக்காலை 6-20 க்குபிலவங்க வருடம் ரோகிணி நட்சத்திரத்தில் மேட லக்கினத்தில் உதயமாகிறது. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சேர்ந்து கொண்டாடும் தினம் இந்த வருடப்பிறப்பாகும். சில பத்திரிகைகள் ஏனோ இதை சிங்கள, இந்து புதுவருடம் என்று தவறாக குறிப்பிடுகின்றன. இந்தியாவில் கோடிக்கணக்கான இந்துக்கள்வாழ்கிறார்கள். அவர்கள் எல்லோருக்குமே நாளை புதுவருடமல்ல. தமிழ் நாட்டு இந்துக்களுக்குத் தான் நாளை வருடப்பிறப்பு. ஆகையால் இதை சிங்கள, தமிழ் வருடப்பிறப்பு என்று அழைப்பதே சரி,

தமிழரின் ஆசாரப்படிக்கு நாளை அதிகாலையில் பலவித பூக்கள், வில்வங்கள், மருந்து சரக்குகள் ஆகியவற்றை காய்ச்சி எடுத்த மருத்து நீரை தலையில்வைத்து ஸ்நானம் செய்து, சூரியனுக்குப் பொங்கி, பெரியவர்களைக் கண்டு வணங்கி, அவர்களுடைய ஆசீர்வாதம் பெற்று கூடியவரையில் நல்லகருமங்களில் ஈடுபடவேண்டு மென்பதே முறை.

ஆனால்இந்நாட்களில்மிகச் சொற்பமானவர்களே இவற்றை அனுஷ்டிக்கிறார்கள். நாள் நட்சத்திரத்தில் நம்பிக்கை இழந்துவிட்டதாலா அல்லது என்னவாயிருக்கும்?

சிங்கள மக்களின் கோட்பாடுகளின்படிக்கு இன்றிரவு பதினொன்றரைமணி தொடக்கம் நாளையிரவு பன்னிரண்டரை வரை புண்ணியகாலம். நாளைக்காலை 6-09க்கு அவர்கள்புதிய அடுப்பு மூட்டுவார்கள். பின் 8-33க்கு தெற்குநோக்கியிருந்துமுதல் உணவை உண்பார்கள். அதே நேரத்தில் புதுவருட கருமங்களை ஆரம்பிககலாம்.

சித்திரை 2-ந்திகதி [15-4-67]காலை 8-க்கும் 9-க்கும் இடையிலும் 4-ம்திகதி திங்கட்கிழமைகாலை 6-க்கும் 7-5க்குமிடையிலும் கைவிசேஷம் வழங்குவதற்குநல்ல முகூர்த்தம்.

பிலவங்க வருடத்தில் இரண்டுசூரிய கிரகணங்களும் இரண்டுசந்திரகிரகணங்களும் நிகழப்போகின்றன. இவற்றில்இரண்டுசூரிய கிரகணங்களும் நம் தேசங்களில் தோற்ற ஒரு சந்திர கிரகணம்மட்டுமே இலங்கையில் காணப்படும். சித்திரை மாதம் 11-ந்திகதி (24-4-67) திங்கட்கிழமை தோற்றும் இக்கிரகணத்தில் சந்திரன் உதயமாகும்போதே கிரகணம் பிடித்திருக்கும். இரவு 7-18க்கு கிரகணம் முடிவடையும்.

புதுவருடத்தில் உலகத்தில் தலைவிரித்து தாண்டவமாடும் தீய சக்திகள் யாவும் ஒழிந்து, சௌஜன்யமும், சமாதானமும், செல்வமும், சுபிட்சமும் மேலோங்கி வளரவேண்டுமென்று நாம் எல்லோரும் இறைவனை ஏத்தித் தொழுவோமாக!

'ஈழநாடு' வாசக நேயர் அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

**வழிப்போக்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் அமைதிக்கு கனடா வெளியுறவுமந்திரியின் யோசனை

## ஜெனிவா ஒப்பந்தமே சிறந்தவழிஎன்கிறார்

ஒட்டரவ, ஏப்.12

**வியட்னும அமைதிக்கு 1954-ல் செய்யப்பட்ட ஜெனிவா ஒப்பந்தத்தை கனடா வெளியுறவு மந்திரி மீண்டும வலியுறுத்தியிருக்கிறார்.**

வியட்னும் சமாதானத்துக்கு ஜெனிவா ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் சிறந்த வழிகள்என்று கனடா வெளியுறவு மந்திரி நேற்று இங்கு நடைபெற்ற பார்லிமெண்ட் கமிட்டிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

போர்நிறுத்த யோசனையை நான்கு கட்டங்களாகசெயல்படுத்தலாமென்றும் அவர் கூறினார்.

வடவியட்னும்மீது குண்டு வீச்சை நிறுத்தவேண்டுமென்றும், பகை நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள வேண்டுமெனறும், இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவேண்டுமென்றும், படைகளை இரு பகுதிகளும் விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும் ஜெனிவா ஒப்பந்தத்தில் யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செயற்கை இருதயம்

வாஸிங்டன், ஏப். 12

செயற்கை இருதயம் ஒன்றை அமெரிக்க நிபுணர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். நெஞ்சுக்குள் இந்த செயற்கை இருதயத்தைப் பொருத்தி, வெளியே ஒரு 'மோட்டார்' ஒன்றின் மூலம் அந்த இருதயத்தை இயக்கலாமாம்.

ம- பொ. சி. கேட்கிறார்

## மத்திய அரசாங்கத்திடம் அதிகாரம்: தி.மு.க. என்னசெய்யும்?

ஆரணி, ஏப்.12

'தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்துவிட்டது. இனிமேல் சோற்றுப்பஞ்சம் நீங்கிவிடுமென்று எதிர்பார்ப்பதுதவறுன எண்ணமாகும். ஏனென்றால் அதிகாரம் முழுவதும் மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கம் நினைத்தவுடன் தனியாகச்சென்று, எந்த நாட்டிலும் அரிசியைக்கடன்வாங்க முடியாது' என்று தமிழரசுக் கழகத்தலைவம மா. பொ. சிவஞானகிராமணியார் கூறினார்.

ஆரணியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

ம. பொ. சிவஞானகிராமணியார் மேலும்பேசுகையில் கூறியதாவது:—

காங்கிரஸார் ஆட்சியை தி.மு.கழகத்திடம் ஒப்படைக்கையில், சென்னைக்கு ஒரு நாளுக்குப்போதுமான அரிசியை மட்டும் இருப்பு வைத்துவிட்டுப்போனார்கள். இருந்த அரிசியெல்லாம் என்ன ஆயிற்றே தெரியவில்லை. ஏழைகளின்சக்திக்கு ஏற்றாற்போல் அரிசி நியாயமான விலையில்கிடைக்கவேண்டும். அப்படி நியாயவிலையில் விற்கும் பொழுது நஷ்டம் ஏற்பட்டால் அதை மத்தியஅரசாங்கம்தான் கொடுக்க வேண்டும்.

மக்கள் உதவிக்காக சென்னையை நோக்குகிறார்கள். சென்னையோ டில்லியைநோக்குகிறது. டில்லி அமெரிக்காவை எதிர்பார்க்கிறது. இந்நிலை மாறவேண்டும்.

## 'பஸ்கள் தேசிய மயம்'

—கருணாநிதி

சென்னை, ஏப். 18

'பஸ்களை தேசிய மயமாக்கும் திட்டத்திலிருந்து அரசாங்கம் பின்வாங்காது. அதேநேரத்தில் யாரும் நஷ்டத்துக்குள்ளாகமாட்டார்கள்'' என்று தமிழ்நாடு போக்குவரத்து மந்திரி திரு. கருணாநிதி தெரிவித்தார்.

அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ள அரசாங்க போக்குவரத்து டிப்போவை நேற்று முன்தினம் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

## பாரதத்துக்கு 5,500 நிபுணர்

### ஜப்பான் அனுப்பும

டோக்கியோ, ஏப். 12

பலவிதமான துறைகளில் பாரதத்துக்கு உதவிகொடுப்பதற்காக ஜப்பானிலிருந்து 5,500 நிபுணர்கள பாரதத்துக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

## லியூ ஒரு துரோகியாம

டோக்கியோ, ஏப், 12

சீனவின் அதிபர் லியு-ஷோ-சியை துரோகி என சீனகம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை பீப்பள்ஸ்டெயிலி தாக்கியுள்ளது.

பத்திரிகையின் கட்டுரையில் அவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனுல் அது யாரைத் தாக்கியது என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஒருவர் எவ்வளவு நல்லது செய்தபோதிலும், புரட்சியைக் காட்டிக்கொடுத்தால் அவர் ஒரு துரோகியாவார் எனப் பத்திரிகை கூறியது.

## 'உணவுப் பிரச்னை'

புதுடில்லி, ஏப். 12

'உணவுப் பிரச்னை தேசிய அடிப்படையில் தீர்த்து வைக்கப்படவேண்டும்' என்று கேரள முதல் மந்திரி திரு. நம்பூதிரிபாத்தெரிவித்தார்.

புதுடில்லி மலையாளிகள் சங்கம் நேற்றுமாலை தமக்கு அளித்த வரவேற்பு ஒன்றில் பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறு சொன்னார்.

'உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மத்தியஅரசாங்கம் ராஜ்யங்களுக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்'' என்றார் திரு. நம்பூதிரிபாத்.

## மஸ்கேலியா ஓயாவிலிருந்து யாழ். நகருக்கு மினசாரசேவை

கொட்டாஞ்சேனை, புதன்

யாழ்ப்பாணத்துக்கு கூடிய மின்சக்தியை அளிக்கும் நோக்கமாகவும், கூடிய பணத்தை மிச்சப்படுத்தும் நோக்கமாகவும்மஸ்கேலியா ஓயா மின்சாரநிலையத்தில் இருந்து மின்சாரம் விநியோகிப்பதற்கான ஆக்க வேலைகள் நடைபெற்றுள்ளன.

19கோடிரூபா செல்வில் செயல்படவிருக்கும்இத்திட்டம் 3 வருடத்தில்பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மஸ்கேலியாவிலிருந்து மின்சாரக் கம்பிகள் கொழும்பு, அநுராதபுரம், பொலநறுவை, திருக்கோணமலை ஆகிய இடத்தினூடாக சுன்னுகம் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று கூறப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் மேலும் பல கிராமப்புறங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு சட்டஆலோசனை

சங்கானை, புதன்

உள்ளூராட்சி மன்றங்களுக்கு சட்டஆலோசனைகூறுவதற்காக ஒருபிரிவை ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் நிறுவ உத்தேசித்திருப்பதைபாராட்டி சங்கானைப் பட்டினசபைத் தலைவர் மந்திரிக்கு தந்தியொன்று அனுப்பியுள்ளார்.

தலைவர் அனுப்பிய தந்தியில் இத்திட்டத்தை விரைவில் நடைமுறைக்கு கொண்டுவரும்படியும் இதனுல் ஸ்தலஸ்தாபன மன்றங்களுக்கு பெரும் நன்மை ஏற்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது உள்ளூராட்சி மன்றங்களினுல் நடாத்தப்படும் வழக்குகளுக்கும் சட்டரீதியான ஆலோசனைக்கும் ஸ்தலஸ்தாபன மன்றங்களே பணம்கொடுக்கவேண்டியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்குஇலவசசட்டஆலோசனை வழங்கவேண்டுமென இரு வருடங்களுக்குமுன்னர் சங்கானைப்பட்டினசபையில்தற்போதய தலைவரினுல் ஓர் பிரேரணைசமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 'எனக்கு வேண்டாம்'

—நந்தா

புதுடில்லி, ஏப். 12

ஸ்ரீ குல்ஸாரிலால் நந்தாவை உபஜனுதிபதி பதவிக்கு நிறுத்தலாம் என்று பார்லிமெண்டரி சபைக்கூட்டத்தில் காமராஜர்யோசனை கூறினார். ஆனுல் நந்தா அதற்குச் சம்மதிக்கவில்லை. என் பெயரைக் கொண்டு வராதீர்கள் என்று சொல்லிவிட்டார்.

## ஜப்பான் அணு சக்தித்தலைவர்

### பாரதம செல்கிறார்

டோக்கியோ. ஏப்.12

உத்தேச அணுஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஜப்பான் நாட்டு அணுசக்தி தலைவர் பாரதம் செல்கிறார். ஜப்பான் மந்திரிசபை நேற்று இதனைத் தீர்மானித்தது. ஜப்பான் வெளியுறவுமந்திரி இந்தத் தகவலை நேற்று வெளியிட்டார்.

## முதல் மந்திரிகள்

புதுடில்லி, ஏப். 12

இங்கு நடைபெற்றஎல்லா ராஜ்யங்களின் முதல் மந்திரிகள் மகாநாடு நேற்றுடன் முடிவடைந்தது.

வல்வை சம்பவம்

## "எம். பி. க்கள் நடவடிக்கையை வரவேற்கிறேம்"

யாழ்ப்பாணம், வியாழன்

''வல்வெட்டித்துறை பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு அப்பாவி கொலைசெய்யப்பட்டுள்ளார் இச்செயலிலிருந்து எமது அரசாங்கம் எவ்வளவுதூரத்துக்கு ஜனநாயகத்தை கௌரவிக்கின்றனரென்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது'' என்று வல்வெட்டித்துறையில் கடந்த சனிக்கிழமை நடந்த சம்பவம் குறித்து இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி [மாஸ்கோ] செயலாளர் திரு. ஐ ஆர் அரியரத்தினத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''பொலிஸ் அநியாயத்துக்கு எதிராக தமிழ் எம்.பி.க்கள் எடுக்கும் சகலநடவடிக்கைகளையும்நமது கட்சியினர் வரவேற்கின்றனர்'' என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயப்படை நேர்முகத் தெரிவு

சுழிபுரம், புதன்

சுழிபுரம், மூளாய், தொல்புரம ஆகிய கிராமங்களில் விவசாயப்படைக்கு மனு செய்தவர்களுக்கானதெரிவு இம்மாதம் 18ந் திகதி செவ்வாய்கிழமை சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் நடைபெறும். வலிகாமம் மேற்கு காரியாதிகாரி என். மாணிக்கநடராசா இந்நேர்முகத்தெரிவைநடத்துவார்.

## நாடகம்

யாழ்ப்பாணம், புதன்

அனலைதெற்கு பயிலியல் கல்லூரி சரஸ்வதி மன்றத்தினர் 'நெஞ்சத்தில் நீ' என்னும் நாடகத்தை இம்மாதம் 14ம் திகதி மேடையேற்றவிருக்கின்றனர். நாடகத்திற்கு திரு, வ. வீரகந்தையா தலைமைவகிப்பர்.

## குணமடைகிறார்

சுழிபுரம், புதன்

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற பொலிஸ் பொதுமக்கள் மோதலில் காயமடைந்த பொலிஸ்சார்ஜன்ட் கே. இராசரத்தினம் மூளாய் கூட்டுறவுவைத்தியசாலையிலுள்ள பொன்னம்பலம்வார்ட்டில்தங்கி சிகிச்சைபெற்றுவருகிறார்.

## ஆலயஉற்சவம்

நீர்வேலி, வெள்ளி

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில்8-ம் திருவிழாவான இன்று இரவு சிவத்திரு. சுவாமிநாததம்பிரான் 'ஞான பண்டிதனும் பொய்யாமொழியும்' என்னும் பொருளபற்றிசங்கிதக்தாப் பிரசங்கம் நிகழ்த்துவார். பக்தர்களின்சௌகரியத்தை முன்னிட்டு விசேஷ பஸ் சேவைஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

## ஆண்டு விழா

உடுப்பிட்டி, புதன்

கரணவாய் சிறுவர் முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டிகளும் கரணவாய் தெற்கு வெள்ளாச்சியா வளவு வயிரவர் கோவில் மைதானத்தில் இம்மாதம் 23ந் தேதி திரு. எஸ். சந்திரசேகர் தலைமையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# யுதாண்ட் காமராஜரைச்சந்தித்தார்

## வியட்னும் பிரச்னை குறித்துப் பேசினர்

[புதுடில்லி. ஏப்ரல் 12

ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரை நேற்றுச் சந்தித்துப் பேசினர். உலகத்தின் இன்றைய முக்கிய பிரச்னைகள் பற்றி இருவரும் பேசியதாக அறிவிக்கப்பட்டது. வியட்னும் பிரச்னை பற்றியும் பேசப்பட்டதாகக் கூறப்பட்டது.]

நேற்றுமுன்தினம்கொழும்பிலிருந்து இங்கு வந்துசேர்ந்த ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டை வெளிவிவகார மந்திரி சக்ளாவும், உயர் அதிகாரிகளும், அயல்நாட்டுத் தூதர்களும் வரவேற்றனர்.

யுதாண்ட் பெரும் ஆசியத் தலைவரென்றும், ஆசியா மட்டுமின்றி உலகம் முழுவதுமே அவர் பெருமை பேசப்படுகிறதென்றும் வெளியுறவு மந்திரி திரு. சக்ளா பாராட்டிப்பேசினர்.

தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில், நேரு சமாதானப் பரிசை பெறத் தான் இங்கு வந்துள்ளபோதிலும், வியட்னும் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வுகாண முயற்சிப்பதில் இந்தியத் தலைவர்களுடன் தான் நடத்தும் பேச்சுப் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

யுதாண்டும் பிரதமர் இந்திராவும் ஒரு மணி நேரம் பேசினர்.

### யுதாண்டுக்கு பாராட்டு

வியட்னுமில் அமைதி நிலவச் செய்வதற்காக ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் மேற்கொண்டுள்ள தீவிர முயற்சிகளை பிரதமர் இந்திரா காந்தி பாராட்டினர்.

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டுக்கு நேற்று முன்தினமிரவு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பிரதமர் பேசினர்.

சமாதானத்துக்காகத் தொடர்ந்து பாடுபடுவதைத் தவிர வேறு வழிகளில்லை. இந்த விஷயத்தில் தாங்கள் முக்கியமான பங்கைவகிக்கிறீர்கள். ஆகவே நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் நல்ல பலன் அதனுல் கிட்டும் என நம்புகிறேன்' என்றும் கூறினர் திருமதி இந்திரா காந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானெலியில் புத்தாண்டு நிகழ்ச்சிகள்

கொழும்பு, புதன்

புத்தாண்டு தினத்தையொட்டி 13, 14-ம் திகதிகளில் இலங்கை வானெலியில் விசேஷ தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும். ஒலிபரப்பப்படும் நேரமும், நிகழ்ச்சிகளும் வருமாறு:-

13-4-67 பி. ப. 6-45 பிலவங்க வருடப் பலாபலன்கள் பற்றி பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதையர் பேச்சு.

காலை 7-30 — 7-45 இசைச் சித்திரம் — 'சிரித்துவரும் சித்திரை' யாழ்ப்பாணத்து வீரமணி இயற்றிய பாடல்களைக்கொண்டு தொகுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், பரம் தில்லைராசா, இராம் குமாரசாமி, பரமேஸ்வரி விஜயரத்தினம், சத்தியபாமா இராசலிங்கம் ஆகியோர் பங்குபற்றுகிருர்கள். இந்நிகழ்ச்சியின் மறுஒலிபரப்பை 15-ந் திகதி இரவு 9-30 முதல் 9-45 வரை கேட்கலாம்.

இரவு 9-30—10-30 புத்தாண்டை முன்னிட்டு ரேயல்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இசைவிழாவில் முதற்பாகம். இவ்விசைவிழாவில் பங்குபற்றியவர்கள். திருவாளர்கள் பரம்தில்லைராசா இராம் குமாரசாமி, திருமதிகள் பரமேஸ்வரி விஜயரத்தினம், சத்தியபாமா இராசலிங்கம்.

14-4-67 காலை 5-00 — 6-40 கொழும்பு செட்டித்தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்திலிருந்து தேர்த்திருவிழா நிகழ்ச்சிகளின் நேர்முக வர்ணனை அஞ்சல் செய்யப்படும்.

காலை 7-30 முதல் 7-45 வரை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய புதுவருடச் செய்தி.

காலை 9-00—9-45 கவி அரங்கம்—''அலைவிடுதூது'' என்ற பொருள் பற்றிய கவிஅரங்கம். இக்கவி அரங்கில், பண்டிதர் செ. பூலாலபிள்ளை, புலவர் புவனேஸ்வரி கார்த்திகேயன் பண்டிதர் வி. பரந்தாமன், கவிஞர் செ. கதிரேசபிள்ளை, கலாநிதி ஆ. சதாசிவம் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

இரவு 9-30—10-30 புத்தாண்டை முன்னிட்டு ரேயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இசைவிழாவில் இரண்டாம்பாகம். இவ்விசைவிழாவில் பங்குபற்றியவர்கள் திருவாளர்கள் பரம் தில்லைராசா, இராம் குமாரசாமி, திருமதிகள் பரமேஸ்வரி விஜயரத்தினம், சத்தியபாமா இராசலிங்கம்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனம்

### வியாழன் 13-4-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 நாதசுரம்,

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இவ்வார அதிதி.

இரவு 6-15 தமிழோடிசை பாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை விழா அஞ்சல்—ரேயல் கல்லூரி.

## திவ்ய ஜீவன சங்க புது வருட விழா

கண்டி, புதன்

கண்டி சச்சிதானந்த தபோவனத்தில் திவ்யஜீவன சங்கத்தின் ஆதரவில் தமிழ் சிங்கள வருடப்பிறப்புவிழா காலை 5 மணிக்குப் பூஜை, தேவார பாராயணம், வழிபாடு முதலியவற்றுடன் ஆரம்பமாகும். யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா விழாவை நடாத்துவார். சுவாமியின் மேற்கத்தைய நாடுகளுக்குச் சென்ற படக்காட்சி ஒன்றும் இடம்பெறும்.

## சட்ட நடவடிக்கை

உடுப்பிட்டி, புதன்

மண்டான் குடியேற்றத் திட்டத்துக்கு அண்மையிலுள்ள முடிக்குரிய காணிகளில் அத்துமீறிக் குடியேறியிருப்பவர்கள்மீது சட்ட மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு வடமாராட்சிக் காரியாதிகாரி ஆலோசித்துவருவதாகத் தெரியவருகிறது.

புத்தாண்டை புனிதமுடன்
கொண்டாட
உங்களுக்குத் தேவையான
எல்லா விதமான
ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
கண்கவர் கலர்களில்
பலவித ரகங்களில்
ரெர்லின் சேட்வகைகளும்
பெற்று மகிழ
இன்றே விஜயஞ்செய்யுங்கள்!
ராஜ்கோபால்ஸ்
36, 1, பெரியகடை — யாழ்ப்பாணம்
போன்: 168

சினிமாவிமர்சனம்

## ஆனந்தி

'பாமா'

புரட்டினாலும் திருட்டினாலும் மாளிகைகட்டி, பகட்டாக வாழ்வு நடாத்தும் பெரிய மனிதர் ஒருவரின் போலி வாழ்க்கையையும், அவருடன் முட்டிமோதிஅவரது அறியாத்தனத்தை வெளியுலகுக்கு அம்பலப்படுத்தும் இளைஞர் ஒருவருக்கு ஏற்படும் கஷ்டங்களையும், சிரமங்களையும், அந்த இளைஞனுடன் காதல் கொண்டுவிட்டு 'பெரிய மனிதர்' மகளின் பெருந்தன்மைகளையும் கொண்டநல்லசமூக சீர்திருத்தப் படம்தான் ''ஆனந்தி''.

போலி வாழ்வு நடத்தும் பெரியமனிதராக நடிகவேள் ராதா வருகிருர். இப்படியான பாத்திரம் ராதாவுக்குப் பழகிப் போனது. அருமையாக வசனங்களைப் பேசி தன்மீது ஆத்திரத்தையே உண்டாக்கிவிடுகிருர். தனக்குப் பொன்னுடை போர்த்தப்படும் கட்டத்தில் ராதாவுக்கு ஒரு ராதா தான்!

எஸ் .எஸ். ஆர். நன்ருக நடித்திருந்தபோதிலும் சில காட்சிகளில் அவரிடம்இயற்கையான நடிப்புக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடுகிறது. 'இலட்சியவாதி'ப்பாத்திரம் அவருக்குப் பொருத்தமாகவேயிருக்கிறது.

ஆனந்தியாகவரும் விஜயகுமாரி நன்ருக நடித்திருக்கிருர். சிரிக்கவைக்க நாகேஷ்-மனேரமா சோடிகள் இருக்கிருர்கள்.

குற்ருலம் அருவியில் எஸ். எஸ். ஆரும்விஜயகுமாரியும் குளித்துக்கொண்டே, 'குளிரடிக்குது, குளிரடிக்குது கூட வரட்டுமா?...' என்று பாடும் காட்சி—கண்ணுக்கு குளிர்ச்சியாகவும் காதுக்கு இனிமையாகவும் இருக்கிறது,

நல்ல டைரக்ஷன், நல்ல நடிப்பு, நல்ல பாடல்கள், நல்லபலகாட்சிகள்கொண்ட நல்லவளான 'ஆனந்தி'யை குடும்பத்தோடுசென்று பார்க்கலாம்.

யாழ்ப்பாணம்ராஜா தியேட்டரில் இப்போது இப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது.

## 3 மூடை அரிசி பிடிபட்டது

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு பஜாரிலுள்ள கடையொன்றை வவனியா உணவு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. டீ. சிவப்பிரகாசம், முல்லைத்தீவு உணவுக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. வி. முதலித்தம்பியின் உதவியுடன் திடீர்ப்பரிசோதனை செய்தார். அப்போது 3 மூடை மில்ச்சாட் அரிசி இருக்கக்காணப்பட்டு 3 மூடை மில்ச்சாட் அரிசியையும் கைப்பற்றியபின் முல்லைத்தீவு அரசினர் சப்ளை நிலையத்தில் பாரம்கொடுத்துள்ளார்.——

### மேலதிக உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணப்பகுதி மேலதிக உள்ளூராட்சி உதவி ஆணையாளராக திரு. டான்போட் நேற்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவிஆணையாளராக திரு. எஸ்.ஸி.மாணிக்கவாசகர் யாழ்ப்பாணம் மாநகரசபை நெல்லியடி பட்டினசபை கட்டைவேலிகிராமசபை ஆசியவற்றின் விசேஷ ஆணையாளராகவும் தற்போது சடமையாற்றுவதாலேயே மேலதிக உள்ளூராட்சி ஆணையாளராக திரு. டான்போட் நியமிக்கப்பட்டுள்ளார்.

# 'உணவுப்பிரச்னை தீர வயலில் இறங்குங்கள்'

## வவனியா அரசாங்க அதிபர் அழைப்பு

வவனியா, புதன்

'நாட்டில் இன்று உருவெடுத்துத் தாண்டவமாடும் உணவுப் பிரச்னைக்குத் தீர்வு காணச் சகலரும் வயலில் இறங்கி வேலைசெய்யவேண்டும். இதனால் எமது நாடு வெளிநாட்டிலிருந்து உணவு பொருட்களை இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது. வவனியாவைப் பொறுத்தவரை விவசாயத்துக்கு நல்ல மண் இருந்தும் அதைப் பயன்படுத்தாமல் இருப்பது கவலை அளிப்பதாக இருக்கிறது ஒவ்வொரு குடும்பத்தினரும் தேவையான உணவைத் தாமே உற்பத்திசெய்யமுயலவேண்டும் என்று வவனியா அரசாங்க அதிபர் திரு. வி.சி.பெரேரா உணவு உற்பத்தி சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், இன்று உலகத்தில் உன்ன நிலையை வகிக்கும் நாடுகளெல்லாம் தங்களின் முயற்சியாலும், அயராத உழைப்பினாலும்தான் பொருளாதாரத் துறையில் முதலிடம் வகிக்கின்றன. ஏன் எமது நாடும் இந்த வரிசையில் சேரக்கூடாது. உங்கள் கையில்தான் அது தங்கியிருக்கின்றது. சகலரும் தமது தேவையைப் பூர்த்தி செய்து, நாட்டுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். அத்துடன் இலங்கையிலிருந்து வேறு நாட்டுக்கு உப உணவுப்பொருட்கள் அனுப்பவேண்டும் என்ற நம்பிக்கை மனதில் உறுதியாக உண்டாகவேண்டும்.'

### உணவுஉற்பத்தி கூட்டம

சுழிபுரம். புதன்.

உணவுஉற்பத்தி விடயத்தில் அரசாங்கம் செய்யும் பணிகள் எவைஎவை என்பதையும் இவற்றில் பலநோக்கு சங்கங்கள் பயிற்செய்கைக் குழுவினர், கிராம சேவையாளர், உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்கள் ஆகியோர் கடமைகள் பற்றியும் விளக்குவதற்கான ஒரு ஆலோசனைக் கூட்டம் வலிமேற்கு பலநோக்கு கூட்டுறவு சமாஜத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பலபிரதிநிதிகள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் ஒவ்வோர் விடயமும்ஆராயப்பட்டது. பசளை கடன், விதைகள் விநியோகம் ஆகிய விடயங்கள் இங்கேபரிசீலனை செய்யப்பட்டன. ——

### புதுவருடவிழா

யாழ்ப்பாணம், புதன்.

சுன்னுகம் பொலிஸ்பகுதி புது வருடவிழா இம்மாதம் 14-ம்தேதி இராமநாதன் கல்லூரிமைதானத்தில்யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெறும்.


அன்று காலை உடுவில்எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தேசியக் கொடியை ஏற்றி வைப்பார். அழகு ராணிப் போட்டி, சயிக்கில்போட்டி, மரதன் ஓட்டம் மற்றும்பல நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணம். வியாழன்

கோப்பாய் பொலிஸ்பகுதி புதுவருடதேசிய தினவிழா நாளைகாலை 8மணிக்கு கிறிஸ்தவகல்லூரிமைதானத்தில் ஆரம்பமாகும்.

15மைல் சைக்கிள் ஓட்டம் வெங்காயக்கூடைபின்னுதல் கரபந்தாட்டம்கயிறிழுத்தல் தல் முதலியநிகழ்ச்சிகள் இவ் விழாவில் இடம்பெறும்.

கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை, அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோர். இவ் விழாவில் கலந்து கொள்கின்றனர். —



யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் திரு. பி. லோகநாதன் ஹாவாய் பல்கலைக் கழகத்திலே மண்வள சாஸ்திரத்தில் எம். எஸ். ஸி. பட்டம்பெற்று அங்கே ஆராய்ச்சி உதவியாளராசப் பணியாற்றினர். அமெரிக்க கலிபோர்னியா சர்வகலாசாலையில் 'கலாநிதி' மேற்படிப்புக்காக இம்மாதம் புறப்பட்டுச் சென்ற இவ்விளம் வாலிபருக்கு ஹாவாயில் விசேஷ பிரிவுபசாரம் நடந்தது இவர் டாக்டர் பரிபூரணனந்தரின் புதல்வராவார். இலங்கைல் சர்வகலாசாலையி ரசாயன டிமான்ஸ் டிரேட்டரா க இருக்கையில் இவர் 'ஸ்காலர்ஷிப்' பெற்று இரண்டு வருஷங்களுக்கு முன் புறப்பட்டுச் சென்ருர்.

### முள்ளியவளையில் மாதர்சங்கம்

முல்லைத்தீவு, புதன்

முள்ளியவளைப் பெண்கள் ஒன்று கூடி முள்ளியவளையில் மத்திய மாதர் சங்கம் என்ற பெயரில் ஓர் சங்கத்தை ஸ்தாபித்துள்ளனர். தங்கள் செலவில் ஓர் ஆசிரியையை நியமித்து தையல் வகுப்பு ஒன்றையும் ஆரம்பித்துள்ளனர். இந்தத் தையல் வகுப்பை முல்லைத்தீவு பிரிவுக் காரியாதிகாரி திரு. கா. தயாபரன் ஆரம்பித்து வைத்தார். அவர்ஆரம்பித்துவைத்துப்பேசுகையில் மாதர்இப்படிப்பட்ட செயல்களில் மட்டுமின்றி உட உணவு உற்பத்தியிலும் தங்கள் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்று கூறினர். கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. அருள்நாயகம் .மாதர் கடமையும், உணவு உற்பத்தியும் என்னும் பொருள்பற்றியும் பேசினர். நடப்பு உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவி:- இ. இராஜம்மா, செயலாளர்:- வி. செல்லம்மா, தனதிகாரி:- ஆர். செல்லாச்சி நிர்வாக சபையில் ஆறு பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### மல்லிஅறுவடை

சுழிபுரம், புதன்

தொல்புரத்தில் பரீட்சார்த்தமாக விளைவிக்கப்பட்ட மல்லி நல்ல விளைச்சலைக் கொடுக்கக் கூடிய அறிகுறிகள் காட்டியதைத் தொடர்ந்து விரைவில் பெரிய திட்டஅமைப்பில் தொல்புரத்தில் மல்லி விளைவிக்க நடவடிக்கைகள் கமக்காரர்களால் மேற்கொள்ளப்பட விருக்கின்றன.

### வருடாந்த கூட்டம

சுழிபுரம், புதன்

தொல்புரம் சன சமூகநிலையத்தின்வருடாந்தக்கூட்டம் இம்மாதம் 19ம்திகதி ஞாயிற்றுக்கிழமை தொல்புரம்பல நோக்குக் கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம

### அடைவு நகைகள் ஏல விற்பனவு முன் அறிக்கை

எனது அடைவு கடையில் 31-3-66-க்கு முன் வைக்கப்பட்ட அடைவுகள் 30-4-67-க்கு முன் மீட்கப்படாவிட்டால் பகிரங்க ஏலத்தில் விற்க ஒழுங்கு செய்யப்படும்.

அ. தம்பிப்பிள்ளை
அடைவு பிடிப்பவர்
நெடுங்காடு,
1738 காரைநகர்.

புத்தூர்

ஸ்ரீ சோமாஸ்கந்தகல்லூரி

பழைய மாணவர் சங்க

### ஆண்டுப் பொதுக்கூட்டம்

16-4-67 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர்களை வரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

த. காசிநாதன்,
ஷெ சங்கச் செயலாளர்.

1739

நியூ காஸிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி — சரோஜாதேவி
நடித்த
பாலும் பழமும்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி


யாழ் பாடசாலைகள் மெய்வல்லுந போட்டி

## நவாந்துறை ரே. க.பாடசாலே, அச்சுவேலி சென.திரேசா முதலிடம்

யாழ்ப்பாணம், வியாழன் வடமாகாண கல்விப் பகுதியினரால் நடாத்தப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட ஆரம்ப தேசிய பாடசாலைகளின் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி தொடர்ந்து இருநாட்கள் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆண்கள் போட்டியில் நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலையும், பெண்கள் போட்டியில் அச்சுவேலி சென்.திரேசா பாடசாலையும் சாம்பியன்களாயின.

ஆண்கள் போட்டியில் நாவாந்துறை 33 புள்ளிகளும் ஆவரங்கால்மெதடிஸ்த மிஷன் பாடசாலை 29 புள்ளிகளும், மல்லாகம் அமெரிக் மிஷன் பாடசாலை, உடுத்துறை தமிழ்க் கலவன்பாடசாலை, கொழும்புத்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலைஆகியனமுறையே 25 புள்ளிகளும் பெற்றன.

பெண்கள் போட்டியில் அச்சுவேலி சென்.திரேசா பாடசாலை 52 புள்ளிகளும், குருநகர் சென்.ஜேம்ஸ் 18 புள்ளிகளும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி 15 புள்ளிகளும் பெற்றன. அச்சுவேலிப் பாடசாலையைச் சேர்ந்த செல்வி வே. மேரி 150 யார் தூரத்தை 22.6 செக்கண்டில் ஓடியும், சிறுவிழான் பாடசாலையைச் சேர்ந்த செல்வன் ஆ. தயாபரசிங்கம் உயரம் பாய்தல் போட்டியில் 4' — 7'' உயரத்தைப் பாய்ந்தும் புதிய சாதனைகளை ஏற்படுத்தினர். ஆண்கள் போட்டியில் சுழிபுரத்தைச் சேர்ந்த ச. கிருஷ்ணமூர்த்தியும், வளலாயைச்சேர்ந்த இ. சோமசுந்தரமும், பெண்கள் போட்டியில் அச்சுவேலியைச் சேர்ந்த செல்வி ப. விக்குறவாவும் நாயன்மார்கட்டைச் சேர்ந்த செல்வி பாக்கியலட்சுமியும் தமது பாடசாலைகளுக்கு அதிகமான புள்ளிகளைப்பெற்றுக் கொடுத்தனர்.

வடமாநில உடற்பணிப்பாளர் திரு. ஆர். சீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. எஸ். இராசா பரிசில்களை வழங்கினர்.

### போட்டி முடிவுகள்

சுழிபுரம், புதன் வலிகாமம்-மேற்கு காரியாதிகாரி பிரிவில் அதிசநெல் விளைவுப் போட்டியில் பின்வரும் இடங்களைச் சேர்ந்தவர்கள்முதல் மூன்றுபரிசுகளையும் பெறுகின்றனர். முதலாம் பரிசு: சண்டிலிப்பாய் வாசி, இரண்டாம்பரிசு ஆனைக்கோட்டைவாசி, மூன்றும் பரிசு மூளாய்வாசி.


REGAL - JAFFNA
Yul Brynner &
Richard Widmark
in
FLIGHT FROM
ASHIYA
Time: 4-15, 7-00 9-45 p. m.

இப்பொழுது
திரையிடப்படுகிறது
மனோஹரா
[யாழ்ப்பாணம்]
6-30, 9-30மணி. போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் 4 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி
நடித்த
சம்சாரம்
புத்தம் புதிய கொப்பி

7-4-67 முதல்
ஈஸ்வரன்
[கிளிநொச்சி]
தினசரி 6-30, 9-30
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி 1727


### 'உணரத் தவறிவிட்டன'

நாவலப்பிட்டி, புதன் "தாய்மைக்கு முதலிடம் தந்து தரணியிலே புகழ் வளர்த்தபரம்பரையில்வாழ்ந்த தமிழ்த் தாய்மார்கள் மலையகத்தில் பெரும்கஷ்டப்படுகிறார்கள். மழைக்கும் வெய்யிலுக்கும் தம்மை ஈடுகொடுத்து இந்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திவருவதைமுதலாளிவர்க்கமும் அரசாங்கமும் உணரத்தவறிவிட்டன."

இவ்வாறுகொத்மலைகட்டபூலா தோட்டத்தில்மாதர் முன்னணிக் கூட்டத்தில் பேசிய தொழிலாளர்தேசிய சங்க நாவலப்பிட்டி மாவட்டப்பிரதிநிதி திரு. என். எஸ். இராஜ்சுந்தரர் குறிப்பிட்டார். மாவட்டத் தலைவர் திரு. எம் சுப்பிரமணியம் கூட்டத்திற்குத்தலைமை தாங்கினர்.

### இறைச்சிக்கடை திறப்பதற்கு ஆட்சேபம

அளவெட்டி, புதன் மல்லாகம் கிராமசபைப் பகுதியில் மாட்டிறைச்சிக்கடை திறப்பதை அளவெட்டி கிராமமுன்னேற்றச் சங்கம் ஆட்சேபித்துள்ளது.

மல்லாகம் கிராமசபைக்கு அதிகவருமானம்வர ஏதுவாக இருப்பதால் இப்பகுதியில் மாட்டிறைச்சிக்கடை திறப்பதற்கு அனுமதி வழங்குவதெனஅது தீர்மானித்திருக்கிறது. இதனைத்தொடர்ந்தே இவ்வித ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசபையின் சகல உறுப்பினர்களுக்கும் இவ்வித ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் பிரதிகளை அனுப்பி வைப்பதெனவும் கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் இதுசம்பந்தமாக நட[illegible]

### நகர மண்டப...

[2-ம் பக்கத் தொடர்ச்சி

பான்மைத் தமிழ்மக்கள் சபையின் வைப்பில் வைத்திருக்கும்பணத்தைக்கொண்டு மிகவும் பொருத்தமான வசதி கூடிய இடத்தில் பிறிதொரு மலகூடத்தை சிறப்பு ஆணையாளர் குழு அமைக்கிறது.

இந்தமக்களின்நலனுக்காக ஒரு நெசவு நிலையத்தை நிறுவும்படி மலகூடத்தை இடிப்பதற்கான கட்டளைகூட முன்னுள் மாநகர முதல்வர் ஒருவராலேயே வழங்கப்பட்டதும் இங்கு கவனிக்கத்தக்கது.

#### ஆணைக்குழுவின் கூட்டங்கள்

சிறப்பு ஆணையாளர்களுள் ஒருவரான திரு. டபிள்யூ. ஜே. பெர்னுந்து சில வேளைகளில் மாதம் இருமுறையும், சில வேளைகளில் மாதம் ஒருமுறையும் வருவது உண்மைதானெனினும், அது ஏனைய சிறப்பு ஆணையாளர்கள் சமுகம் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லையென அர்த்தப்படாது. நேர்முகப் பேட்டிகள், மற்றும் நிர்வாக நோக்கங்களின் தேவைகளுக்குச் சிறப்பு ஆணையாளர்களில் யாராவது ஒருவருடைய சேவை வாரத்தின் ஒவ்வொரு நாளும் கிடைக்கக்கூடியதாகவே இருந்து வருகிறது. ஆணைக்குழுவின் கூட்டம் சபைக் கூட்டம் ஒன்றினைப் போன்றதே. எனவே நேர்முகப் பேட்டிகளுக்கு திரு பெர்னுந்துவின் சமுகம் நாளாந்தம் கிடைக்கக்கூடாதிருப்பது இயற்கையானதே. அப்படி இருந்தும் கடித மூலம் நியமனங்களைக் கோரிப் பெற்றுக்கொண்டவர்களானமுன்னுள் மாநகர முதல்வர்கள், முன்னுள் அங்கத்தவர்கள் உள்ளடங்க, நகரின் பிரபலஸ்தர்கள் பலருக்கும் அவர் பேட்டிதந்திருக்கிறார்சிறப்பு ஆணைக்குழுவினர் கூட்டங்கள் யாவும் எல்லாக்காலத்திலும் மாநகரசபை அலுவலகத்திலேயே நடைபெற்று வருகிறது. முன்னர் மாநகர முதல்வர் செய்ததுபோன்று பிற அலுவலக கடமைகளின் நிமித்தமே சிறப்பு ஆணையாளர்கள் கொழும்புக்குப் போயிருக்கிறார்கள்.

#### நீதிமன்றக்கட்டணங்கள்

சபைக்கு எதிரான வழக்குகள் எதிலும் செலவிடப்படும் சட்டமுறைக்கட்டணங்கள் யாவும் சபை நிதியைக் கொண்டே சரிக்கட்டப்படுவதுதான் எந்த மாநகர சபையிலும் கைக்கொள்ளப்படும் நியம வழமையாக இருந்துவருகிறது. அதற்கு அமைவாகவே இங்கும்நடைபெற்றது. குறித்த வழக்கு கோமறைச்சபை [பிரிவிக் கவுன்சில்] வரை போக வேண்டிஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலைக்குச் சிறப்பு ஆணையாளர்களோ அல்லது யாழ்ப்பாண மாநகர சபையோ பாத்திரவாளிகளல்ல. இங்கும் செலுத்தப்பட்ட கட்டணங்களின் தொகை ரூபா 15 000-க்கு உட்பட்டதே அல்லாது ரூபா 50,000-ம் அல்ல வென்பதையும் அறிய மக்கள் தெளிவுபெறுவார்கள்.

#### சந்தை அமைப்பு

முன்னுள் மாநகர முதல்வர் ஒருவரே உத்தேச சந்தைக்குத் திட்டம் இட்டவர் அதற்கான படங்களைத் தயாரிப்பதில் தொகை ரூ. 29,850 மட்டிலுமே செலவிடப்பட்டுள்ளது. சந்தைக்கான மேற்படி திட்டம் பிறக்கு முன்பே குறை ஆயுளில் அழிந்துவிட்டதென்பதுடன், அது உருப்பெறத் தவறியது. கேள்விகள் கோரப்பட்டிருந்ததாயினும் இத்திட்டத்தையோ அதற்கான படத்தையோ அங்கீகரிக்க அடுத்துப் பதவிக்கு வந்த மாநகர முதல்வர் மறுத்துவிட்டார். இதற்கான ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்சாகச் சட்டமுறைக் கட்டணவகையில் இம்முதல்வரால் மேற்கொண்டு ரூபா 2,928-10 செலவிடப்பட்டது. அடுத்து பதவிக்கு வந்த முதல்வர் படங்கள் தயாரிப்பதில் தொகை ரூபா 3,344-12 செலவிட்டார். இத்திட்டம் விவரணப் படங்கள் இல்லாமையால் கைவிடப்பட, ஒப்பந்தக்காரரர்சபைமீதுவழக்குத் தொடர்ந்தார். குறிப்பிட்ட இவ்விடயத்தில் நேர்ந்த செலவுமட்டும் கிட்டத்தட்ட ரூபா 32,000 ஆகும். ஒரு நவீன சந்தையை உடையது என்று சபை பெருமை அடையக்கூடியதாக அரசாங்க நாடு நகர் திட்டமிடுபவர் வரைந்த

[6-ம் பக்கம் பார்க்க]


## வரி விளம்பரம்

### தேவை

நிர்வாகப்பங்காளி:
நல்லமுறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பற்றறி சேவீஸுக்கும், பாட்ஸ் கடைக்கும் நிர்வாகப்பங்காளி தேவை. விபரங்களுக்கு V. சிங்கவேலு, 'பெற்றோல் செட்', மருதனுமடம், சுன்னுகம். 1700

### விற்பனைக்கு

கார்
'சொன்சல்' கார் கியர் பொக்ஸ் கவுண்டர் வீல் புதிது. 222, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1901

விண்ணப்பப் படிவங்கள்
மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பப் படிவங்களுக்கு 5 பத்துச்சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தகக்கல்வி நிலையம், திருநெல்வேலி. 1698

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய ப[illegible] கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் [illegible]கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

3-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
வெம்பிளி [கண்டி] மொடேன் [பதுளை] நியூசினிமா [குருனுகலை]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விழிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனேகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனேரமா, கருணுநிதி
மற்றும் பலர் நடிக்கும்

இரு வல்லவர்கள்

✻ கொடியேற்றமா!
✻ கோவில் திருவிழாவா!!
✻ கலியாண அலங்கரிப்புகளா!!!
எதற்கும் உகந்த
யாவரும் விரும்பும்
செவ்வந்திப்பூக்கள்
(CHRYSANTHUMS)
எம்மிடமுண்டு.
ஆடர்கள் உடன் கவனிக்கப்படும்.
உத்தரவாதமுடைய புகழ் பெற்ற பூ வியாபாரி
எஸ். ஏ. பெர்னுண்டோ
தபால்பெட்டி எண் 16,
நுவரெலியா. 1737


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கணவர் இறந்து கிடந்தார்; நான்மயங்கி விழுந்தேன"

## சரசாலை கொலை வழக்கில் மனைவி சாட்சிய

யாழ்ப்பாணம், வியா "ஐயோ ஐயோ என்று தெற்குப் பக்கத்திலிருந்து சத்தம்கேட்டது. நான் சத்தம்வந்த திசையை நோக்கி வேகமாக ஓடினேன். எனது கணவர் இறந்துகிடந்தார், அவ்விடத்தில் அநேகர் கூடி நின்றனர். அவர்களை அடையாளம் காணமுடியவில்லை. கிட்டச்சென்றபொழுது தான் மயங்கி விழுந்துவிட்டேன்"

சரசாலை கொலைவழக்கில் எதிரிசார்பில் ஆஜரான பரிஸ்டர் எம். சிவானந்தன் குறுக்குவிசாரணை செய்கையில் கொலையுண்டவரின் மனைவி புவனேஸ்வரி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் இவ்வருடம்பெப்ரவரிமாதம் 19ம்திகதி சரசாலையில் செல்லத்துரை பேரம்பலம் என்பவர் கந்தையா சிவகுருவை கத்தியால்குத் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் பரிஸ்டர் எம். சிவானந்தன், புறக்டர்களான வி. கனகசபை, எஸ். கே. திரவியநாயகம், வி. செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் அட்வகேட் ரி. தம்பித்துரை புறக்டர் ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடனும், சாவகச்சேரிபொலிஸ்இன்ஸ்பெக்டர் சி. எல். விஜயதிலகாவின் உதவியுடனு ஆஜரானார்.

கொலையுண்டவரின்மனைவி புவனேஸ்வரிகூறியதாவது - காலஞ்சென்றவர்எனதுகணவர் எனக்கு நான்கு பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் உண்டு. 3பெண்கள் திருமணம்செய்துவிட்டனர். சம்பவம்நடந்ததினம் பகல் 2 மணிக்கு என்கணவர் சயிக்கிலில் சாவகச்சேரிக்குச் சென்றார். அன்று 4மணிக்கு நான் வீட்டிலிருந்தேன். எங்கள்வயலுக்குப்போய் மாடு பிடித்துக்கொண்டுவந்துகட்டினேன். அந்தமாடு பேரம்பலத்துக்குச்சொந்தமானது நான் மாட்டைப்பிடித்து வரும்போது யாருங்காணவில்லை. அதன்பின் தருமலிங்கம்கந்து வாழையிலை வாங்கிச்சென்றார். தெற்குப் பக்கத்திலிருந்து 'கூ' என்ற சத்தமாய்குளறிக்கேட்டது நான்அப்பக்கமாகஓடினேன் அவர் இறந்துகிடந்தார்.

நீதிபதி: அங்குவேறுயார் நின்றார்கள்.?

சாட்சி: சாட்சிக்காரர்எல்லாரும்நின்றார்கள்: எனக்கு யார் யார் என்று தெரியாது எனதுமகள் சரஸ்வதியும் வந்துகுளறினாள். பொலிசாருக்கு வாக்குமூலமளித்தேன்.

குறுக்கு விசாரணையின் போது மனைவி புவனேஸ்வரி கூறியதாவது: எங்கள் வீட்டிற்குமுன்னால் உள்ள ஒழுங்கையின் ஒருபக்கம்வயலுக்குச்செல்கிறது. மற்றப் பக்கம் ரோட்டுக்குச்செல்கிறது. ஒருபக்கத்தால்இராமாவில் பிள்ளையார் கோவிலும் இருக்கிறது.

வழக்கறிஞர்: கோயில் பக்கமாக சத்தம்கேட்டதா? இல்லைரோட்டபக்கம்கேட்டது

வழ: ரோட்டுக்குப்போகும்வழி எப்பக்கம் செல்கிறது? இப்படிப்போய், அப்படிப்போய் உப்படிப்போகிறது.

வழ: என்னமாதிரி சத்தம் கேட்டது? ஐயோ ஐயோ என்று.

வழ: வேகமாக ஓடினீரா?- மிக வேகமாக ஓடினேன். மகள் சரஸ்வதியும் ஓடிவந்தார்

வழ: சத்தம் கேட்டபோது என்ன நடந்ததென்று தெரியுமா?- கிட்டப் போனபின் தான் தெரியும்.

வழ: அங்கு நின்றவர்களை தெரியுமா?- எனக்கு தெரியாது. கிட்டப்போனதும் மயங்கிவிட்டேன்.

வழ: எவரையும் அடையாளம் காணமுடியவில்லையா?- இல்லை.

வெற்றிவேலு சிவப்பிரகாசம் சாட்சியமளிக்கையில், 'இறந்தவர் தனது மாமனென்றும், பிரேதத்தை தான் அடையாளம் காட்டியதாகவும் அன்று மாலை நமசிவாயம் சிவப்பிரகாசம் வந்து 'கொம்மானை பேரம்பலம் வெட்டிப்போட்டான்' என்று கூறியதாகவும் அதன்பின் அங்கு போனபோது எதிரியின் படலையடியில் அம்மான் செத்துக் கிடந்ததாகவும் கூறினார்.

மேல்விசாரணை இம்மாதம் 18-ம் திகதி நடைபெறும்.

## மீசாலை திருட்டு வழக்கு

சாவகச்சேரி, புதன் "நள்ளிரவு 1மணிக்கு இராசையா வீட்டில் ஐயோ என்ற சத்தம் கேட்டது. நான் எழுந்து பொல்லுடன் ஓடிப்போனேன்' மூவர் அங்கு நின்றனர். ஒருவர் கத்தியும் மற்றவர் தடியும் வைத்திருந்தனர். அவர்களில் கறுவலுக்குத்தான் கொட்டனால் அடித்தேன். உடனேமூவரும் வீதிக்கு ஓடினார்கள்.

மீசாலை திருட்டு வழக்கில் சட்சியமளித்த18வயதுவாலிபர்கந்தையாநாகராசாமேற்கண்டவாறுகூறினார் இவ்வழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் சுமார் 230 ரூபா பெறுமதியான பணத்தையும், நகையையும் 66-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் திகதி இரவு மீசாலைவேலுப்பிள்ளை இராசையா வீட்டில் திருடியதாக க. இரத்தினம், கே. இராசையா உட்பட ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1-ம், 2-ம், 7-ம் எதிரிகள் சார்பில் புறக்டர் சி. பாலகிருஷ்ணனும், 3-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஜே. ஜெயசிங்கமும், 4-ம் எதிரி சார்பில் புறக்டர் எஸ். பி. மயில்வாகனமும், 5-ம் 6-ம் எதிரிகள் சார்பில், புறக்டர் வி. செல்லத்தம்பி, புறக்டர் ஆர் டி. சிவகுரு ஆகியோரும் ஆஜரானார்கள். வழக்காளி தரப்பில் சாவகச்சேரி பொலிஸாருடன் அட்வகேட் எல். ஜெயக்கொடி ஆஜரானார்,

மேல்விசாரணை இம்மாதம் 22-ம் திகதி நடைபெறும்.

## பொலிஸார் நடவடிக்கை

பண்டத்தரிப்பு, புதன் இப்பகுதியில் சட்டவிரோதமாக மாடு அடிப்பவர்களைக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

## 'வீட்டுக்கொரு கைத்தொழில்நிலையம்'

அளவெட்டி. செவ் "நாடு வளர்ச்சியுற நமது சுயதேவையைப் பூர்த்தி செய்ய வீட்டுக்கொரு கைத்தொழில் நிலையம் தோன்ற வேண்டும்," என்று நெசவு ஆசிரியர் திரு. சிவநேசன் மாவிட்டபுரம் ஞானசுந்தரம் இல்லத்தொழிலகத்தில் நிறுவப்பட்ட நெசவுநிலையத்தை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசாங்கத்தின் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தை நாம் பயன்படுத்தி ஒவ்வொரு வீட்டிலும் சிறுகைத் தொழில்களை ஆரம்பித்து வெளிநாட்டுச் செலவாணியை மிச்சம் பிடித்து தேசிய அபிவிருத்திக்கு நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

## பூரண விசாரணை ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சென்ற சனிக்கிழமை நடைபெற்ற சம்பவங்களுக்குப் பின்னர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சம்பவம் நடைபெற்ற இடங்களை நேரில் சென்று பார்வையிட்டது தெரிந்ததே.

## நகர மண்டப...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

படத்தின்படி ஒரு மாதிரிச் சந்தையை அமைப்பதற்கே சிறப்பு ஆணையாளர்குழு முன்வந்துள்ளது.

**பஸ் நிலையம்**

மாதிரிச் சந்தைக்கான நிலையத்தை இடம்மாற்றும் எத்தனத்தில், முன்னும் பின்னுமாக பஸ்நிலையம் இருதடவை இடம் பெயர்த்து நகர்த்தப்பட்டிருக்கிறது. அதற்காக முதல்முறை ரூபா 16,576-17 சதமும், இரண்டாவது முறை ரூபா 35,000-ம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இது பொதுப்பணத்தை வீணில் விரயமாக்கும் செயலல்லவென்றால், அதுகூறும் கதை தான் என்னவென்று தயவாக ஆனால் நியாயமாகவே கேட்கிறோம்.

இவ்விடயம் சம்பந்தமாக ரூபா 35 லட்சம் செலவில் உத்தேசிக்கப்பட்டிருக்கும் புதிய சந்தையின் பொருட்டு எவ்வித செலவும் செய்யாது, நாடு நகர் திருத்த அமைப்பாளரின் ஒத்துழைப்டன், சம்பளம் பெறும் சபை ஊழியர்கள் மூலம் படம் வரைந்து, கேள்விகள் கோருவதற்குவேண்டிய கணியல் பட்டியல்களையும், கிடைப்படங்களையும் தயாரித்துள்ளோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

**வீதி அமைப்பிற்கான கல்லும் மண்ணும்**

சுகாதார சபை நாட்களிலிருந்து யாழ்ப்பாணத்தின் கடைசி மாநகர முதல்வர் காம்ல வரையில் பாவிக்கப்பட்டுவந்ததும், யாழ்ப்பாணத்தில் கிடைக்கக்கூடியதாக இருப்பதுமான ஒரே கல்லையும், மண்ணையும் தான் தொடர்ந்து உபயோகித்து வருகிறபடியால் கல்லினதும், மண்ணினதும் தரம் பற்றிய குற்றச்சாட்டு வெறும் மனோ சற்பிதமானதொன்றே.

யாழப்பாணநகரை அழகுபடுத்தி, பொதுமக்களுக்குக் கூடுமான சேவைகளை இச் சந்தர்ப்பத்தில் செய்யப் பலபல விதங்களில் ஆவன செய்துவருகிறோம். இதுபற்றிய விபரங்களை உரியகாலத்தில் பொதுமக்களுக்கு அறியத்தரக் காத்திருக்கிறோம்.

**விசேஷ ஆணையாளர்கள்**
யாழ்ப்பாண மாநகரசபை.

# செல்வம் கொழிக்கும் நாடாக மாற்றலாம்

## கூட்டுறவுசங்கஆண்டுவிழாவில் பேச்சு

சாவகச்சேரி, புதன் "உணவுப் பொருள் உற்பத்தியில் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் முயற்சி எடுப்பதன் மூலம் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்தை நீக்குவதுடன் நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டை செல்வம் கொழிக்கும் நாடாக்க முடியும். இச்சேவையால் நம் நாட்டு மக்களுக்கும் பெரும் சேவை செய்தவராவோம். உண்வுஉற்பத்தியைப் பெருக்கச் சங்கங்கள் ஒத்துழைத்தல் அவசியம். எனவே இத்திட்டம் வெற்றி பெற அனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம்".

இவ்வாறு டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தென்மராட்சிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆண்டுவிழாவில் பேசிய வடமாகாண உபஅதிபர் திரு. யே. என். சபாரத்தினம் கூறினார். தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை உட்பட மற்றும் பலர் பேசினர்.

# "கையால் அடித்த பினபு துரத்திச் சென்று ஓங்கிக்குத்தினர்"

## மண்டதீவு கொலை வழக்கில் சாட்சி கூறியது

யாழ்ப்பாணம், வியாழன் "நான் யாழ்ப்பாணத்திலிருந்து மண்டதீவிற்கு பஸ்ஸில் சென்றேன். எதிரிகள் டாக்ஸியில் வந்தனர். இறந்தவரை 2-ம் எதிரி கையால் முதலில் அடித்தார். பின் துரத்திச் சென்று அவர் விழுந்தவுடன் கையால் ஓங்கிக் குத்தினர்".

மண்டதீவு கொலை வழக்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சாட்சியமளித்த சபாரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் 67-ம் ஆண்டு ஜனவரி 20-ந் திகதி மண்டதீவில் சாம்பசிவமூர்த்தி என்பவரை குலசிங்கநாதன் சிவபாதசுந்தரம், பாலசிங்கம், திருநாவற்கரசு ஆகியோர் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் ஏ. அன்ரனியின் அனுசரணையுடன் ஆஜரானார். 3-ம் எதிரி சார்பில் புறக்டர் வி. கதிரவேலு ஆஜரானர். 4-ம் எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

சபாரத்தினம் சாட்சியமளிக்கையில், 2-ம் எதிரியின் கையில் ஆயுதமிருந்ததை காணவில்லையென்றும், 2-ம் எதிரியைத் தவிர மற்ற எதிரிகள் ஒன்றும் செய்யவில்லையென்றும் கூறினார்.

டாக்டர் இரத்தினசபாபதி திருநாவற்கரசு சாட்சியமளிக்கையில், இறந்தவரின் உடலில் உள்ள காயங்களின் விபரத்தைக் கூறினார்.

மேல்விசாரணை இம்மாதம் 23-ந் திகதி தொடர்ந்து நடைபெறும்.

## வருஷப்புறப்பு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியாழன் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயததில் பிலவங்க வருஷப்பிறப்பு தினத்தை முன்னிட்டு நாளை அதிகாலை 5-15 மணிக்கு தீர்த்தோற்சவமும், காலை 6- மணிக்கு காலசந்தியுடன் விஷேபூசையும், மாலை 4 மணி முதல் 6 மணிவரை பக்கவாத்தியசகிதம் பக்திப்பாடல் நடைபெறும். மாலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை பண்டிதர் இர்த்தினேஸ்வர ஐயர் "சிவாலயவழிபாடு" என்னும் பொருள் பற்றி சொற்பழிவு நிகழ்த்துவார். இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவம் நிகழும்.

## 1500 ஏக்கர்....

[1-ம் பக்கத் தொர்ச்சி]

ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரியருகிறது.

உழவு யந்திரங்களை வேறு மாவட்டத்திற்கு அனுப்பும்படி அரசாங்க அதிபருக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டதாகவும், இவ்வேலைகள் முடிவடையும்வரை யந்திரங்கள் வேறுமாவட்டத்திற்கு அனுப்பப்படாதென அரசாங்க அதிபர் அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

1500 ஏக்கர் நெல் அரசாங்க அதிபரின் முயற்யால் காப்பாற்றப்பட்டதால், சுமார் 1000 குடும்பங்களை எதிர்நோக்கியிருந்த வறுமை நீங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோப்பாய் வடக்கு தொலைபேசி தொடர்பு

### எம். பி. திறந்து வைத்தார்

உரும்பராய், வியாழன் கோப்பாய் வடக்கு உபதபாற்கந்தோர் தொலைபேசித் தொடர்பை கோப்பாய் எம் பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். இவ்வைபவத்திற்கு கோப்பாய் வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமை வகித்தார்.

திரு. கதிரவேற்பிள்ளை தொலைபேசித் தொடர்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், "தமது சிறு சிறு தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கத்தை நம்பியிராமல் நாட்டுமக்களே அவற்றைச் செய்து முடிக்கவேண்டும்" என்று கூறினார். கந்தோர் ஊழியர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில், அவர்கள் எல்லா வேறுபாடுகளையும் மறந்து, பொதுமக்களுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொள்ளவேண்டும் என்று கூறினார்.

மற்றும் வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி திரு. வேதாரணிய சேயோன், வடபகுதி தபால், தந்தி அத்தியட்சகர் திரு. தா. தருமலிங்கம், சமூகசேவா சங்கத்தலைவர் திரு. இ. இராமலிங்கம் ஆகியோரும் பேசினர். இறுதியில் கோப்பாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கக் காரியதரிசி திரு. அ. காசிப்பிள்ளை நன்றியுரை கூறினார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாராக் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதியில் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org